[27th April 1959

திட்டத்தை அமுல் நடத்துவதில்லை என்று சர்க்கார் அவர்கள் பேரில் நடவடிக்கை எடுக்கிறார்கள். ஆகவே, நீலகிரி ஜில்லாவுக்கு புல் டோஸர்ஸ் அதிகமாக 'அலாட்' செய்வதற்கு சர்க்கார் ஏற்பாடு செய்வார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நீலகிரி ஜில்லாவின் அவசியம் பற்றியும் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

SRI A. R. SUBBIAH MUDALIAR : புது டிராக்டர்கள் வாங்குவதற்கு சர்க்காருக்கு உத்தேசம் உண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : சர்க்காரே புது டிராக்டர்களை வாங்கி பழைய முறைப்படி உபயோகிப்பது என்று இப்பொழுது உத்தேசமில்லை. கூட்டுறவு சங்கங்களுக்கும், தனி நபர்களுக்கும் 'ஹையர் பர்சேஸ் ஸ்கீம்' படி வாங்கிக் கொடுக்கலாம் என்பதுதான் அரசாங்கத்தின் உத்தேசம்.

Free legal aid to Harijans

*160 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Works be pleased to state whether there is any proposal to give free legal aid to Harijans?

THE HON. SRI P. KAKKAN : The Government are already giving free legal aid to specially deserving Harijans in Criminal cases launched against them by Caste Hindus or vice versa.

SRI P. G. MANICKAM : 1958-வது வருஷத்தில் இவ்வித சட்ட உதவி தேவை என்று எத்தனை ஹரிஜனங்கள் தெரிவித்தார்கள் ? எத்தனை பேர்களுக்கு சட்ட உதவி அளிக்கப்பட்டிருக்கிறது ?

THE HON. SRI P. KAKKAN : தனிக் கேள்வி கேட்க வேண்டும்.

SRI N. K. PALANISAMI : இப்பொழுது கிரிமினல் கேஸ்களுக்குத்தான் இந்த சட்ட உதவி கொடுக்கப்படுகிறது. சிவில் கேஸ்களுக்கும் இம்மாதிரி சட்ட உதவி கொடுப்பதற்கு சர்க்காருக்கு ஏதாவது உத்தேசம் இருக்கிறதா ?

THE HON. SRI P. KAKKAN : சிவில் கேஸ்களுக்கு கொடுக்க இப்பொழுது இடமில்லை. இருந்தாலும், எங்கேயாவது அவர்களுடைய குடிசையை அகற்ற நேரிட்டால் அது சம்பந்தமாக ஏதாவது 'லீகல் எய்டு' கொடுக்க முடியுமா என்பது இப்பொழுது பரிசீலனையில் இருந்துவருகிறது.

SRI S. LAZAR : இப்பொழுது இப்பேற்பட்ட சட்ட உதவி கொடுக்கப்பட்டிருக்கிறது. கோர்ட் பீசை பொறுத்த வரைக்கும்கூட ஏதாவது உதவி கொடுப்பதாக சர்க்காருக்கு உத்தேசம் உண்டா ?

THE HON. SRI P. KAKKAN : அந்தந்த கேஸின் தன்மையைப் பார்த்து கலெக்டர் அவர்கள் பரிசீலனை செய்து 'லீகல் எய்டு' கொடுக்க வேண்டுமென்று அவர் எண்ணினால், சர்க்காருக்கு எழுதி, பிறகு சர்க்கார் பெர்மிஷன் கொடுக்கிறார்கள். அதற்குப் பிறகு வக்கீல் நியமிக்கப்பட்டு அந்தக் கேஸ் சம்பந்தமாக அவர்கள் சார்பில் விவாதிப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுகிறது.

27th April 1959]

SRI T. SAMPATH : பொருளாதாரத் துறையில் பின் தங்கியவர்களுக்கு, 'பேக்வேர்டு' சமூகத்தினருக்கு இம்மாதிரி உதவி கொடுக்கப்படுமா ?

THE HON. SRI P. KAKKAN : பொதுவாக கனம் அங்கத்தினர்களுக்குத் தெரியும். அந்தமாதிரி நியாயம் இருந்தால் அரசாங்கத்தின் மூலமாக தர்ம வக்கீல் வைத்து நியாயம் வழங்கப்படுகிறது என்பதை கனம் அங்கத்தினர்கள் அறிவார்கள்.

Supply of carts to scavengers

* 161 Q.—**SRI P. G. MANICKAM** : கனம் ரெவின்யூ அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) 25-ம் தேதி செப்டம்பர் மாதம் 1958-ம் வருஷத்தில் 513-ம் எண் கேள்விக்கு அளித்த பதிலையொட்டி நகரசபைகளிலும், பஞ்சாயத்து போர்டுகளிலும், வேலைசெய்யும் நகர சுத்தி தொழிலாளர்கள் அசுத்தப் பொருள்களைத் தலையில் தூக்கிச் செல்லக்கூடாது என்று அரசாங்கத்தாரால் எப்போது உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது ?

(ஆ) நகரசபைகளிலும், பஞ்சாயத் போர்டுகளிலும் வேலைசெய்கின்ற நகர சுத்தித் தொழிலாளர்களுக்கு எத்தனை தள்ளுவண்டிகளும், கை வண்டிகளும் சப்ளை செய்யப்பட்டிருக்கின்றன ?

(இ) இன்னும் எத்தனை நகரசபைகளுக்கும், பஞ்சாயத்து போர்டுகளுக்கும் சப்ளை செய்யப்படவில்லை ?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) Instructions were issued by the Director of Public Health in December 1956.

(*b*) About 1,541.

(*c*) Out of 63 Municipalities and 273 Class I Panchayats, 40 Municipalities and 159 Class I Panchayats have supplied wheel barrows to their Sanitary workers. Information about Class II Panchayats is not available as most of them are not employing scavengers.

SRI P. G. MANICKAM : சென்னையிலிருக்கிற ஒரு கண்டிராக்டருக்கு தள்ளுவண்டிகளுக்கும் கைவண்டிகளுக்கும் லைசென்ஸ் கொடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. ஒரு வண்டி மொத்தம் ரூபாய் 270 என்று விற்பனை செய்யப்படுவதாகத் தெரிகிறது. இதில் பாதி 135 ரூபாய் கவர்ன்மெண்டார் மான்யமாகக் கொடுக்கிறார்கள். எல்லா பஞ்சாயத்து போர்டுகளும். . .

MR. SPEAKER : நீங்கள் கேட்கிற உப கேள்விக்கும் மூலக் கேள்விக்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது ? எத்தனை முனிஸிபாலிடிகளுக்கு இந்த வண்டிகள் சப்ளை செய்யப்படுகின்றன, இன்னும் எத்தனை முனிஸிபாலிடிகளுக்கு சப்ளை செய்யப்படவில்லை என்பதுதான் மூலக் கேள்வி. இப்பொழுது நீங்கள் வண்டியின் விலையைப் பற்றி கேட்கிறீர்கள்.

SRI P. G. MANICKAM : பஞ்சாயத்து போர்டுகள் அங்கு சென்று இதை வாங்க முடியாத நிலைமையில் இருப்பதனால், சர்க்கார் மான்யமாகக் கொடுக்கக்கூடிய ரூபாய் 135 விலையிலே வண்டிகளை செய்யக்கூடிய